| வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் - இரண்டாம் தவணைப் பரீட்சை 2018 | | |
|---|---|---|
| தரம் : 11 | **விடைகள்** | பாடம்: தமிழ் இலக்கிய நயம்/දෙමළ සාහිත්‍යය |

பகுதி I

1) 1) அ) வேய்த்தோ ளவட்டு மேனி முறி
முறுவல் முத்தம் நாற்றம் வேல் உண்கண்
ஆ) மூங்கிலைப் போன்ற தோளை உடையவளுக்கு உடல் நிறம் தளிரே, தான். பல் முத்தே தான். இயற்கை மணம் மிகுதியாக உள்ளது. கண் வேலே தான்.
2. அ) உருவகம் - காவேரி நதியானது தாயாகவும், சோழ நாடு மகவாகவும் உருவகிக்கப்படுகிறது.
ஆ) காவேரி நதியின் பெருமை சிறப்பிக்கப்பட்டுள்ளது.
3. அ) உவமை அணி ஆ) இலக்குவணன்
4. அ) பாத்தும்மாவால் - பாருக் நானாவுக்கு ஆ) தெளிவு (சிறுகதை)
5. அ) கபிலர் என்ற புலவரால் ஆ) கிளியோட்டல்

(4x5 = 20 புள்ளிகள்)

2) 1. குறிஞ்சித் தென்னவன்
2. தோட்டத் தொழிலாளிப் பெண்களின் வேதனைகளும் அதிலிருந்து மீளத்துடிக்கும் அவர்களது வேட்கையும்
3. ✓ காலையிலே பனி காயுமுன்னே குளிர்காற்றைக் கிழித்துமே ஓடுகிறோம்.
✓ தொழிற் சாலையிலே சங்கு ஊது முன்னே பசுந்தங்கத் தளிரினை கிள்ளிடுவோம்.
✓ வெண்டை விரல்கள் விறைத்திடினும் எங்கள் மேனி குளிரில் நடுங்கிடினும்
✓ இரு கெண்டை விழிகள் பளபளக்கும் தளிர் கிள்ளவோ கைகள் பரபரக்கும்.
4. வேகமாக விரைந்து செல்லும்
5. உவமை அணி
உவமானம் - பசுந்தங்கம்
உவமேயம் - தளிர்
பொதுத்தன்மை – பளபளப்பு

(5x5 = 25 புள்ளிகள்)

3) 1. • குழந்தைப் பருவத்தில் தொட்டில் • நடை பழகும் பருவத்தில் நடை வண்டி
• பள்ளிப்பருவத்தில் ஏடுகள் • மணப்பருவத்தில் கட்டில்
• கிழப்பருவத்தில் ஊன்று கோல் • இறந்த பிறகு பாடை
2. தாகத்துக்கு பானம் தந்து, பசிக்கு உணவூட்டி, உடுத்த உடையாகி, வசிக்க வீடாக நோய்க்கு மருந்தாகி, பயணத்திற்கு சக்கரங்களாகி வேலைகளில் கைக்குள் கையாகி சுவாசத்திற்கு காற்றை சலித்துக் கொடுத்து உதவுகிறது.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி இடுக.
4. மனிதனின் சுவாசத்திற்காக மரங்கள் காபனீரொட்சைட்டை உள்ளெடுத்து ஒட்சிசனை வெளிவிடுகின்றன.
5. 1) விருட்சம் 2) பிணி 3) ஆகாரம்
6. பவனம் கொண்டல்

(5 x5 = 25 புள்ளிகள்)

4) அ) ✓ ஜப்பானிய மொழியின் லாவகம். உலகளவில் புகழ் பெற்றுத் திகழும் அழகுக் கவிதை வடிவம். வாசிப்போரை மயக்கச் செய்யும் வசிக சக்தி – முல்லை முஸ்ரிபா கட்டுரையாசிரியர்.
✓ அனுபவப் பகிர்வு, வியப்பில் ஆழ்த்தும் வீழ்ச்சி, இரசனையூட்டும் அழகு. சிந்தனையை ஏற்படுத்தும் அலை, உணர்ச்சியைத் தூண்டும் ஆற்றல் மிகக் வடிவம். ஒரு மின்னல் அல்லது மின்மினி – முல்லை முஸ்ரிபா – கட்டுரையாசிரியர்.
✓ சிந்தனை எனும் ஜலப்பரப்பில் எறியப்படும் சிறிய கல் போன்றது – சுஜாதா
✓ தூய்மையான கவிதையின் அடர்த்தியான சாறு பிழிவு – கென்னத் யசுதா
✓ சின்னதாய் இருக்கும் பெரிய அற்புதம் - கலிக்கோ
✓ பாதியாய் திறந்த கதவு அதன் வழி எம்மை அழைக்கும் கைச்சைகை – ஆர். எ். பிளித்
✓ கவிஞன் இறங்கிக் கொள்ள வாசகன் அதன் மீது பயணம் தொடர்வான் - ரேமாண்ட் ரோசலிப்
✓ கவிதை உலகின் புதிய மழலை – மேலாண்மை பொன்னுசாமி, அப்துல் ரஹ்மான், தமிழன்பன், அறிவுமதி, லீலவதி, சுஜாதா

(15 புள்ளிகள்)

5) அ) வேகமாக சூழலும் இன்றைய உலகம் தனிமனித தேவைகளையும் விருப்பங்களையும், உணர்ந்து கொள்ளத் தவறி விடுவதால் சகல விடயங்களிலும் அவனை தனிமைப்படுத்தி விடுகின்றது. தனிமைத்துயர், சுயநல வாழ்க்கை வாழ்தல் குறித்த விளைவு.

ஆ)
- ✓ சிறுவயதில் வீட்டில் ஏற்பட்ட தனிமையை போக்குவதற்காக விளையாட்டுத் தோழர்களோடும் அவர்களது குடும்பத்தோடும் இணைந்து போது அவர்களது பெற்றோர்களால் இகழப்படும் போதும் அவமானப்படுத்தப்படும் போதும், அவர்களது அன்பு அரவணைப்பு போலியானது என்று உணர்ந்த போது தனிமைப்படுத்தப்படுகிறார்.
- ✓ கவிதை நண்பரோடு சேர்ந்து தமக்கான ஒரு உலகம் அமைத்துக் கவிதை எழுதிய போது அவரது குடும்பத்தோடு இணைந்த போது, அவர்களது குழந்தையோடு விளையாடி மகிழ்ந்த போது அவர்கள் திடீர் என்று பிரிந்து சென்ற போது தனிமைப்படுத்தப்படுகிறார்.
- ✓ ஒரு பெண் தன்னைக் காதலிப்பதாகக் கூறி பின் மற்றொருவனைத் திருணம் செய்த போது.
- ✓ மற்றொரு புதிய குடும்பத்தோடும் இணைந்த போது அவர்களது குழந்தையோடு விளையாடி மகிழ்ந்த போது அவர்கள் சமூகத்தின் சந்தேகப் பார்வைக்குப் பயந்த போது.

(15 புள்ளிகள்)

6) அ) இயேசு கிறிஸ்து நாதர் எம்மை காப்பாற்றுபவர். எமது உள்ளத்துள் புகுந்து பாவங்களைப் போக்குபவர். எம்மை எவ்வித துன்பமும் வந்து அணுகாது ஒவ்வொரு நாளும் காப்பாற்றுவார்.

- எப்போது அவர் எம்மிடம் வருவார்? நாம் எம்மிடம் உள்ள கர்வத்தை இல்லாமல் செய்கிறோமோ? அன்று அவர் வந்து எமக்குள் புகுவார்.
- எமது பாவங்களை இல்லாமல் செய்ய யேசு கிறிஸ்து நாதர் சிலுவையில் தனது உயிரை மாய்த்தார்.

ஆ) பொருத்தமான விடை இருப்பின் புள்ளி இடுக.

(15 புள்ளிகள்)

7) அ)
- மனைவி கொடுத்த உணவில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. அக்குறைபாடுகளையும் விட மனைவியின் அன்பே மேலோங்கி நிற்கின்றது.
- கணவன் தனது மனைவி மீது கொண்ட பாசமே மேலோங்கியுள்ளது.
- இல்லறப் பண்பாடு கூறப்பட்டுள்ளது.

ஆ)
- தங்க வளைக்கை தொட்டு சமைத்து சாலக்கமழுதையா
- உப்பு கசப்பது என்றாலும் முள் கூடு இனிக்குதையா
- விண்ணின் அமுதம்
- குழந்தை தொட்டு சுவைத்தது. அளைந்தது என்றாலும் தெய்வ அமுதமாக உள்ளது.
- கரிந்து பொரிந்தது என்றாலும அன்பு மணக்குது.
- சரியாக வேகாதது என்றாலும் விந்தையான சுவை கொண்டது.
- பாதி வழிக்கு தாமரைக் கை தந்த பச்சை அமுதம்
- அன்பு கயிற்றால் கட்டிய உணவைத் தொட்டு சுவைக்கையில் உள்ளமெல்லாம் ஒளி மிகுந்தது. என்றெல்லாம் புகழ்ந்துரைக்கின்றார்.